நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 1/2017

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: திலிப் வயது: 29

த/பெ.(அ)க.பெ: ராஜேந்திரன் தொழில்: கிராம நிர்வாக அலுவலர்

ஊர் : திருப்பத்தூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் தற்போது ஆண்டியப்பனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 06.10.2015ந் தேதி நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது போன் முலமாக ஆண்டியப்பனூர் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தை தனி நபர்கள் ஆக்ரமிப்பு செய்வதாக எனக்கு தகவல் வந்தது. தகவல் வந்தவுடன் நான் ஆண்டியப்பனூர் பஸ் நிறுத்தம் அருகே அமைந்துள்ள மந்தை வெளி புறம்போக்கு நிலத்தை சென்று பார்த்த போது புறம்போக்கு நிலம் சர்வே எ்ண 358/2 என்றநிலத்தில் ஆக்ரமிப்பு செய்ய வந்தனர். நான் பார்த்த போது அவர்கள் கர்ணன், ரமேஷ், வெங்கடசேன், ராஜேந்திரன் ஆகியோர்கள் முள்வேலி அமைத்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் அரசு நிலம் என்பதால் முள்வெலி அமைக்க வேண்டாம் என சொன்ன பிறகம், அவர்கள் நிறுத்தவில்லை. அதனால் வருவாய் ஆய்வாளர், நவநிதம் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். நான் தகவல் சொன்ன 10 நிமிட நேரத்தில் அங்கு வந்து விட்டார். நானும் வருவாய் ஆய்வாளரும் எதிரிகளை முள்வேலி போடுவதை தடுத்த போது அவர்கள் சொல்ல கேட்காமல் அவர்கள் முள்வேலி அமைத்தனர். அதன் பிறகு வருவாய் ஆய்வாளர் இது குறித்து வாணியம்பாடி வட்டாட்சியர் அவர்களுக்கு தகவல் சொன்னார். அவர் வேறு முக்கிய பணியில் இருந்ததால் துணை வட்டாட்சியர் சுமதி என்பவரை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தார். பகல் சுமார் 12.30 மணி அளவில் மண்டல் துணை வட்டாட்சியர் சம்பவ இடத்திற்கு வந்தார். அவரும் எதிரிகளிடம் இது அரசு நிலம் என்றும் இதை ஆக்ரமிப்பு செய்ய கூடாது என்றும் சொன்னார். அப்போது எதிரி ரமேஷ் நாங்க்ள அப்படி தான் செய்வோம் என்று சொல்லி உங்கொத்தா என அங்கிருந்த என்னையும் வருவாய் ஆய்வாளரையும், மண்டல் துணை வட்டாட்சியரையும் திட்டினார். வெங்கடேசன், கர்ணன் ஆகியோரும் எங்களை உங்கொத்தா என்று தகாத

WEB COPY

வார்த்தைகளால் திட்டினார்கள். நாங்க்ள சொல்ல கேட்காமல் எதிாகள் முள்வேலியை அமைத்து கொண்டிருந்தார்கள். அதனால் மண்டல துணை வட்டாட்சியர் இது குறித்து காவல் நிலையத்தில் தெரிவிக்கலாம் என்று சொன்னார். பிறகு நாங்கள் அனைவரும் குரிசிலாப்பட்டு காவல் நிலையத்திற்கு சென்றோம். நான் காவல் நிலையத்தில் புகார் எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆகும். சம்பவம் நடந்த இடம் மந்தைவெளி பகுதி என்பதற்கான சர்வே எண் 358/2 'அ' பதிவேட்டின் உண்மை நகல் இது தான். அந்த அ பதிவேடு உண்மை நகல் அ.த.சா.ஆ 2 ஆகும்.சம்பவம் நடந்த இடத்தின் புலவரைபடத்தின் உண்மை நகல் இது தான். அது புலவரைபடம் உண்மை நகல் அ.த.சா.ஆ 3 ஆகும். அலுவலக ரிதியாக மேற்கூறிய ஆவணங்கள் அன்றாட பணிக்கு தேவைபடுவதால் அந்த ஆவணங்களின் உண்மை நகல்களை தாக்கல் செய்துள்ளேன். சம்பவ இடத்தின் அடங்கல் கணக்கின் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். அந்த அடங்கல் கணக்கின் உண்மை நகல் அ.த.சா.ஆ 4 ஆகும். அ.த.சா.ஆ 2 முதல் 4 வரையிலான ஆவணங்க்ள அசல் ஆவணம் நீதிமன்றதிதல் தாக்கல் செய்யபடவில்லை என ஆட்சேபனை தெரிவிக்கபடுகிறது. சாட்சி மேற்படி ஆவணங்'கள் கணிணின பதிவெட்டிற்காக வேலூார் தலைமை அலுவலகத்திற்கு சென்றுள்ளமையால் தாக்கல் செய்யவில்லை என கூறுகிறார். எனவே மேற்கண்ட ஆவணங்க்ள எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது. (அதன் ஏற்பு தன்மை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும்) நீதிமன்றத்தில் தற்போது காட்டப்படும் புகைப்படங்க்ள 1 சம்பவத்தின் போது அந்த இடத்தில் எடுக்க பட்டவையாகும். அந்த புகைபடங்கள் அ.த.சா.ஆ 5 (வரிசை 3) ஆகும். மேற்படி புகைப்படங்கள் சிடியுடன் தாக்கல் செய்யபடவில்லை என எதிரிதரப்பு ஆட்சேபனை தெரிவிக்கபட்டுள்ளது. புகைப்படங்க்ள ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. (அதன் ஏற்பு தன்மை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும்) இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:

அ.த.சா.ஆ 2 முதல் 4 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ 3 உள்ள ஆவணத்தில் சம்பவம் தனியாக குறிக்க படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ 4 அடங்கல் கணக்கில் எதிரிகளின் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். அடங்கல் கணக்கில் உள்ள நபர்கள் எந்த புகாரும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அடங்கல் கணக்கில் உள்ள நபர்களின் மீது நானும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது 25, 30 நபர்கள் இருந்தனர். அந்த நபர்கள் யாரென எனக்கு தெரியாது. எதிரிகள் அவரவர் நிலத்தில் வீடு வாசலுடன் குடும்பம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகளில் கவுன்சிலர், தலைவர் என எந்த

பொறுப்பிலும் உள்ளனரா என்றால் 1ம் எதிரி கர்ணன் சொசைட்டி துணை தலைவராக உள்ளார். அவ்வாறு போலிஸ் விசாரணையின போது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் எனக்கு முன்பின் தெரியாத நபர்கள் என்றால் சரிதான். மேல் அதிகாரிகளின் உத்திரவிற்கு பிறகு தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் அந்த இடத்தில் வியாபாரம் செய்து வருகிறார்களா என்றால் இல்லை. இந்த இடம் பஸ்' நிறுத்ததிற்கு எதிராக என்பதால் நடைபாதை கடைகள் அங்கு உ்ளளது ்னறால் சரிதான். நடைபாதை கடைகளை அகற்றுவதற்காக இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன் என்றால் இல்லை. நடைபாதை கடைகளை அகற்றுவதற்காக நடடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளென். நடவடிக்கை எடுத்த பிறகும் கடைகள் உ்ளளது என்றால் சரிதான். கடைகள் இருப்பதாக என்கக தகவல் சொன்னார்கள். அந்த இடத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். நடை பாதை கடைகளை அகற்றுவதற்காக கூட்டம் வந்த சேர்ந்தது என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் எதிரிகளும் இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது நடைபாதை கடைகளுக்காக எதிரிகள் சிபாரிசுக்கு வந்தமையால் அவர்களின் பெயர்களை தெரிந்து கொண்டு புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் முதலில் வந்த போது காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். போலிஸார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அப்போது மாலை 3, 4 மணி இருக்கும். நடைபாதை கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்களா என்றால் நான் புகார் கொடுத்ததற்காக எடுத்தார்கள். புகார் கொடுத்தும் அவர்கள் ஒத்துழைப்பு கொடுகத்தால் மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னென் என்றால் சரிதான். அவ்வாறு புகார் கூறியதில் யார் ஈடுபடுகிறார்களோ அவர்களின் பெயர்களை சொன்னேன். அவ்வாறு சொன்னதில் அங்கிருந்த எதிரிகளின் பெயர்கள் மட்டும் எனக்கு தெரிந்ததால் அவர்களை குறித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யார் யார் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என எனது புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நடைபாதை கடைகளை அகற்றுவதற்காக ஒரு தவறான புகாரை கொடுத்துள்ளேன் என்றும், எதிரிகள் எனது செயல்பாட்டில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் விசாரித்த பிறகு மீண்டும் வி.எ.ஒ அலுவலகத்தில் வந்து விசாரித்தனரா என்றால் ஆண்டியப்பனூார் கிராமத்திற்கு வந்து விசாரித்தனர். 2, 3 நாட்களில் என்னை சம்பவ இடத்தில் விசாரித்தனர். அவ்வாறு விசாரணையின் பொது நடைபாதை கடைகளை அகறறுவதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளென். வழக்கிற்காக எதிரிகள் குழி தோண்டி கல் புதைத்தார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகள் திட்டவும் இல்லை அரசு நிலத்தை காப்பாற்ற வேண்டி தவறான புகாரை எதிரிகளின் மீது போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நடைபாதை கடைகளை குறித்து தான் புகார் கொடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

WEB COPY

ம.வி: இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 1/2017

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: நவநீதம் வயது: 29

த/பெ.(அ)க.பெ: முருகேசன் தொழில்: வருவாய் ஆய்வாளர்

ஊர் : திருப்பத்தூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி: எஸ்.சி.

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் தற்போது திருப்பத்தூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.07.2015 அன்று நான் ஆண்டியப்பனூர் வருவாய் ஆய்வாளராக பணியில் செர்ந்தேன். கடந்த 06.10.2015 அன்று நான் ஆணிடியப்பனூர் வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.1 எனக்கு போன் தொடர்பு கொண்டு ஆண்டியப்பனூர் பேருந்து நிறுத்தம் எதிரேமந்தைவெளி புறம்போக்கு அருகே சில நபர்கள் அத்து மீறி ஆக்ரமிப்பு செய்வதாக போன் முலம் தகலவ் சொன்னார் நர்ன உடனே சம்பவ இடத்திற்கு சென்றேன். சுமார் 50 நபர்கள் அங்கிருந்தனர். கர்ணன் தலைமையில் ரமேஷ், வெங்கடேசன், ராஜேந்திரன் மற்ற பெயர் நினைவில்லாத நபர்கள் சேர்ந்து கொண்டு மந்தை வெளி புறம்போக்கு நிலத்தில் முள்வேலி போடுவதற்காக கல் நட்டு கொண்டிருந்தார்கள். வி.எ.ஒ எனக்கு தகவல் கொடுத்த அதே சமயத்தில் வட்டாட்சியருக்கு நான் போன் முலம் தகவல் கொடுத்து விட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றென். நான் சென்ற சிறிது் நேரத்தில் மண்டல துணை வட்டாட்சியர் திருமதி சுமதி என்பவரும் சம்பவ இடத்திற்கு வந்துவிடார். நானும் ம.து.வட்டாட்சியரம் அ.சா.1 ஏன் பொது இடத்தில் ஆக்ரமிப்பு செய்த கொண்டு இரக்கிறீஎர்கள் என்று கேட்டோம். அப்போது ரமேஷ், கர்ணன், வெங்கடேசன், ராஜேந்திரன் ஆகியேர்ாக்ள சேர்ந்து எங்களை உங்கொத்த, உங்கொம்மா, எங்களை எதிர்த்து உங்களால் வேலை செய்ய விடமாட்டோம் என்று எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எங்களை வேலை செய்யய விடாத தடுத்த நபர்களை குறித்து புகார் தெரிவிக்க காவல் நிலையம் செ்னறோம். இது குறித்து அ.சா.1 எழுத்து முலமான புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தனர்.

WEB COPY

எ.த.கு.வி:

சம்பவத்தை குறித்து என்க்கு நேரைடையாக தெரியாது என்றால் வி.எ.ஒ போன் செய்த பிறகு சம்பவ இடத்திற்கு சென்றோம். நர்ன சென்ற போது 50, 60 நபர்கள் இருந்தனர் என்றால் சரிதான். அங்கிருந்த நபர்கள் அனைவரின் பெயர் விவரங்கள் எனக்கு தெரியாது. அதே இடத்தில் நடைபாதை கடைகளை எடுக்க சொல்லி பிரச்சனை இருந்ததா என்றால் இருந்தது. எதிரிகளின் வீடுகள், நிலங்கள் 2, 3 கி.மீ. தள்ளி தான் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் சம்பவ இடத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால் எதிரிகள் சைக்கிள் ஸ்டேன்டு போடுவதற்கு இடம் வேண்டுமென ஆக்ரமிப்பு செய்தார்கள். எதிரிகள் 5 பேரும் வியாபாரிகள் அல்ல என்றால் சரிதான். நடைபாதை கடைகளும் வைக்கவில்லை என்றால் சரிதான். சைக்கிள் ஸ்டேன்டு வைத்துள்ளனரா என்றல் சைக்கிள் ஸ்டேன்டு வைப்பதாக தான் சொன்னார்கள். புகார் கொடுத்த அன்று மாலையில் போாலிஸார் என்னை விசாரித்தனர். எனக்கும் அ.சா.1க்கும் மட்டும் தான் தகவல் தெரியும் மற்ற உயர் அதிகாரிகளுக்கு போன் முலம் தகவல் சொன்னோம். சம்பவ இடத்திலிருந்து 1/2 கி.மீ. தொலைவில் எனது அலுவலகம் உள்ளது. 50 நபர்களளில் யார் யார் என்ன செய்த கொண்டிருந்தார்கள் என்றும், பெயர் விலாசமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த இடத்தில் ஆட்டோ ஸ்டேன்டு உ்ளளதா என்றால் முன்பக்கமாக ஆட்டோவை நிறுத்துகின்றனர் ஆனால் ஸ்டேன்டு எதுவும் இல்லை. மற்ற வாகனங்கள் நிற்கும் ஆனால் அங்கு ஸ்டேன்டு கிடையாது. நடைபாதை கடைகள் உள்ளதா இல்லை.சம்பவ நடந்த இடம் எதுவும் எனக்கு தெரியாது என்றும் கேள்விபட்டு தான் சென்றேன் என்றால் தெரியும். மந்தைவெளி புறம்போக்கின் பரப்பிடம் எனக்கு தற்போது நினைவில்லை. புல எண் 58/2 ஆகும். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு செக்பந்தி விவரம் தெரியுமா என்றால் திருப்பத்துார் டு ஆலங்காயம் செல்லும் சாலையில் இடது புறம் அமைந்துள்ளது. அதன் ஒருபுறத்தில் ஏரியும், மறுபுறத்தில் கோவிலும், ஒரு புறம் சாலை வளைந்தும் செல்கிறது. இதன் மத்தியில் தான் சம்பவ இடம் என்றால் சரிதான். சைக்கிள் ஸ்டேன்டு வைப்பதற்காக மனு எதுவும் கொடுக்கவில்லை. போாலிஸ் விசாரணையின் போது சைக்கிள் ஸ்டேன்டடு வைப்பதற்காக ஆக்ரமிப்பு செய்தவாக சொல்லியுள்ளேன். புகார் அளிக்கும் போது நானும் உடன் சென்றேன். அப்போது சம்பவ இடத்திலிருந்து முள்கம்பி, கல் ஆகியவற்றை எடுத்து சென்றார்களா என்றால் இல்லை. சம்பவ இடமும் எதுவும், தெரியாது என்றும், சம்பவத்தை குறித்து எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஆதராாவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையின் சொன்ன சங்கதிகள்

WEB COPY

அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.

ம.வி: இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 1/2017

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சுமதி வயது: 50

த/பெ.(அ)க.பெ: அருமை செல்வன் தொழில்: துணை வட்டாட்சியர்

ஊர் : ஆம்பூர் சமயம்: இந்து

வட்டம் : ஆம்பூர் சாதி: எஸ்.சி.

மாவட்டம் : வேலூர்

WEB COPY

முதல் விசாரணை:-

நான் தற்போது வாணியம்பாடியில் தலைமை துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். 06.10.2015ந் தேதி வாணியம்பாடி மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்த போது வட்டாட்சியர் வாணியம்பாடி தொலைபேசி முலம் தொடர்பு கொண்டு ஆண்டியப்பனூார் கிராமத்தில் பஸ் ஸ்டாப் அருகே மந்தைவெளி இபுறம்பொக்கு ஆக்ரமிப்பு நடைபெறுவதாக வந்த தகவலின் பேரில் என்னை மந்தைவெளிக்கு போக சொன்னார். பகல் 12-/1/4 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். அங்கு சென்றேன் சர்வே எ்ண 358/2 ல் என்ற இடத்தை ஆண்டியப்பனுரை சார்ந்த கர்ணன், குமரவேல், வெங்கடசேன் கல்கம்பம் நட்டு கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் மந்தை வெளி புறம்போக்கில் ஆக்ரமிப்பு செய்யகூடாது எதற்காக கல்கம்பம் நட கூடாது என்று கேட்ட போது ரமேஷ் என்பவர் சைக்கிள் ஸ்டேன்டு அமைப்பதற்காக கல்கம்பம் நடுவதாக சொன்னார்கள். என்னுடன் வி.எ.ஒ திலிப், மற்றம் ஆர்.ஐ. நவநீதம் உடன் இருந்தனர். நாங்க்ள கல் கம்பம் நடுவதை தடுத்தோம். அப்போது பொது மக்கள் அங்கு கூடினர் அப்போது நாங்கள் முவரும் இந்த இடத்தை ஆக்ரமிப்பு செய்ய கூடாது என்று சொன்னோம். அப்போது ரமேஷ் என்பவர் உங்கொத்தா, என்று தகாத வார்த்தைகளால் எங்களை பார்த்து திட்டினார். ரமேஷ் மற்றம் உடன் இந்நத நால்வரும் இங்கிருந்து சென்றுவிடுங்கள் இல்லையெனில் பெரிய பிரச்சனை ஏற்பட்டு விடும் என்று மிரட்டினார்கள். ஆரம்பத்தில் இருந்தே கர்ணனும், ரமேஷம் தான் பிரச்சனை செய்தனர். பிறகு இது குறித்து குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வளர் இளவரசன் சம்பவ இடத்தில் வந்த பொது

எதிரிகள் யாரும் அங்கு இல்லை. பிறகு கல்கம்பங்களை எடுத்து விட்டு நான் அலுவலகம் சென்று விட்டேன். இதுகுறித்து அ.சா.1 குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தார்கள். அதன் பிறகு போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

/2/

எ.த.கு.வி:

சம்பவ இடத்திற்கும் எனது அலுவலகத்திற்கும் சுமா்ா 30 கி.மி. தூரம் இருக்கும். தகவல் தெரிந்த 40 நிமிடத்தில் சுமார் 12-1/2 மணி அளவில் சம்பவ இடத்திற்கு வந்த விட்டேன். சம்பவ நடந்த போது 6, 7 நபர்கள் இருந்து பின்னர் தகவல் தெரிந்து 20, 30 நபர்கள் இருந்தனர். அங்கிருந்த எதிரிகளின் ஊர், பெயர், விலாசம் எனக்கு அப்போது தெரியாது என்றால் சரிதான். அங்கு கூடியிருந்த நபர்களின் பெயர் விவரங்கள் எனக்கு தெரியாது ஆனால் எதிரிகளின் பெயர் விவரங்களை அங்கிருந்த பொது மக்கள் அப்போதே கூறிவிட்டனர். அவ்வாறு கூறியவர்களை யார் என்று எனக்கு தெரியாது. புகாரை வி.எ.ஒ தான் கொடுத்தார். எப்போது கொடுத்தார் என எனக்கு தெரியாது. நான் எனது அலுவலகம் சென்றுவிட்டேன். அவர் வட்டாட்சியரிடம் பேசி இருக்கலாம் எனக்கு தெரியாது. சம்பவ நடந்த இரண்டு, முன்று நாட்களில் என்னை விசாரித்தனர். என்னை அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தனர். சம்பவ இடத்தில் நடைபாதை கடைகள் உள்ளதா என்றால் இல்லை வீடுகள் இருந்தது.அருகே அமைந்துள்ள வீடுகளில் குடியிருக்கும் நபர்கள் தான் எதிரிகளா என்றால் எனக்கு தெரியாது.வழக்கு சம்பவத்தை குறித்து எனக்கு நேரடையாக தெரியாது என்றால் நான் மறுக்கிறேன். வி.எ.ஒ தகவல் சொன்னதன் பேரில் எனக்கு தெரியும் என்றால் இல்லை வட்டாட்சியர் கொடுத்த தகவலின் பேரில் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன். போலிஸார் சம்பவம் நடந்து கொண்டிருந்த போது சம்பவ இடத்திற்கு வந்து விட்டனர். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் மறுக்கிறேன். எதிரிகளுக்கு சைக்கிள் ஸ்டேன்டு போடுவதற்கான அவசியம் இல்லை என்றால் அது ப்ற்றி எனக்கு இதெரியாது ஆனால் அவ்வாறு சொல்லிதான் ஆக்ரமிப்பு செய்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் அ.சா.1க்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி: இல்லை

WEB COPY

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 1/2017

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: முத்துசாமி வயது: 59

த/பெ.(அ)க.பெ: முனிசாமி தொழில்:

ஊர் : ஆண்டியப்பனூார் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்துார் சாதி: எஸ்.சி.

மாவட்டம் : வேலுார்

WEB COPY

முதல் விசாரணை:-

நான் தற்போது ஆண்டியப்பனூார் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஆண்டியப்பனூார் கிராம கிராம நிர்வாக அலுவலர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் வேலூார் நிதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க சென்ற விட்டு மாலை 5 மணிக்கு ஆண்டியப்பனூார் வந்த போது அ.சா 1 புகார் கொடுக்க குரிசிலாப்பட்டு காவல நிலையம் சென்ற போது நானும் உடன் சென்றேன். ஆண்டியப்பனூர் பஸ் ஸ்டாப் அருகே சர்வே 358/2 மந்தைவெளியில் ஆக்ரமிப்பு செய்ததாக ரமேஷ், கர்ணன், மொத்தம் இந்து நபர்க்ள ஆக்ரமிப்பு செய்ததாக சொல்லி அ.சா.1 புகார் கொடுத்தார் நானும் உடன் இருந்தேன். அன்றயை தினம் காலை 10 மணி அளவில் சம்பவம் நடந்ததாக நர்ன கேள்வி பட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:

அன்றயை தினம் மாலை 6 மணி அளவல் அ.சா.1 முதல் 3 வரையிலான நபர்களுடன் நானும் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது 6-30 மணி முதல் 7 மணி இருக்கும். அந்த புகாரில் என்ன சங்கதிகள் எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் விசாரித்த பிறகு அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களை விசாரித்தனாரா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் உள்ளே சென்றனர் நான் வெளியே நின்றேன். அதற்கு பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ம.வி: இல்லை.

WEB COPY